# 7 இலட்சத்து 11 ஆயிரத்து 981 பேர் ஓய்வூதியம் பெறுகிறார்கள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை .. 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

உருவாக்கி இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**எதிர்க்கட்சி கொறடா கூறிய தேர்தலுக்கான கூட்டணி!**

நான் மானியக் கோரிக்கையிலே, குறிப்பாக இரண்டு துறைகள் குறித்து சுருக்கமாக என்னுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறேன். நேற்றைக்கு இங்கே ஒரு விவாதம் நடக்கிற போது பொதுத் துறை பங்குகளை நாம் விற்ப தைக்குறித்த ஒரு விவாதம் வருகிற போது, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசுகிறபோது, ஒன்றை குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்கிறபோது ஒரு விஷயத்தை சட்டமன்றப் பேரவையிலே மிகத் தெளிவாகச் சொன்னார். "கூட்டணி என்பது தேர்தலுக்குத்தான். தேர்தலில்தான் கூட்டணி. தேர்தலுக்குத்தான் கூட்டணி" என்று அவர் நேற்று இங்கு சட்டமன்றத்திலே தெரிவித்தார்கள். அவர்கள் எதை மனதிலே வைத்து அல்லது யாரை மனதிலே வைத்து இதை சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை நேற்றும் இன்றைக்கும் இந்த அவையிலே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு தெரியுமோ அல்லது தெரியாதோ, அதுவும் எனக்குத் தெரியாது. ஒருவேளை இன்றைக்கு வந்து உட்கார்ந்திருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும் அவர் எதை வைத்துக் கொண்டு அப்படி சொன்னார் என்பது அவருக்கு தெரியுமா என்றும் எனக்குத் தெரியாது. எது எப்படியிருந்தாலும் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொன்னதை நீங்கள் இருவரும் நன்றாக மனதிலே குறித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற மாசுவைத் தடுக்க 10.86 கோடி மரக்கன்றுகள் - மீண்டும் மஞ்சள் பை!

நிறைவுரையாக, கடந்த முறை நிதிநிலை அறிக்கைக்கான என்னுடைய பதிலுரையை நான் சொல்கிறபோது, வடக்கிலிருந்து யாரும் வந்து தமிழ்நாட்டை வெற்றிகொண்டு ஆள முடியவில்லை என்பதை நான் தெரிவித்திருந்தேன். மாறாக, தெற்கிலிருந்து பத்தாம் நூற்றாண்டிலே ஒரு மாவீரன் இங்கேயிருந்து கங்கை வரை படையெடுத்து, மாபெரும் வெற்றியைப் பெற்று வந்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**"திருமன்னி வளர இருநில மடந்தையும் போர்ச்செயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன்பெருந் தேவியர் ஆகி"**

என்று தொடங்கக்கூடிய புகழ்பெற்ற மெய்கீர்த்திக்கு சொந்தக்காரன் அவன்.

**"நித்தில நெடுங்கடல் உத்தரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கையும்"**

என அலைகடல் நடுவில் கலம் பலச் செலுத்தி, கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழன்தான் அந்த மாவீரன். அந்த இராஜேந்திர சோழனுக்கு ஒப்பான மகத்தான தலைவனாக தெற்கிலிருந்து ஒரு சூரியனாக இங்கே வந்து வீற்றிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் காண்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் கலைஞர் எனினும், தான் தலைமையேற்று இந்த கழகத்தை நடத்தக்கூடிய ஒவ்வொரு தேர்தலிலும், கழகத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற மகத்தான ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றிகளைத் தேடித் தந்த தலைவர்.

"தனக்குவமை இல்லாதான் தாள் வாழ்க"

என்று சொன்னார்களே, அப்படி தனக்கு உவமை இல்லாத தலைவராக விளங்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் மீண்டும் ஒருமுறை இங்கே நன்றியோடு வணங்க விரும்புகிறேன்.

மாணிக்கவாசகர் என்று அழைக்கக்கூடிய மணிவாசகப் பெருமான், ஆவுடையார் கோயில் என்கின்ற திருப்பெருந்துறையில் இருக்கின்ற இறைவனைப் பாடுகிற போது, திருவாசகத்தில் ஒன்றைப் பாடினார்.

**"கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின இயம்பின சங்கம் ஓவின தாரகைகள் ஒளி உதயத்து ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத் தேவ நற்செறி கழல் தாளிணை காட்டாய் யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே"**

என்று அந்த இறைவனை அவர் துயில் எழுப்பினார். "யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்" என்று சொன்னார். முனிவர்களாலும், முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அறியப்படாத முழு முதற் கடவுளாக இருக்கக்கூடிய இறைவனே யாவர்க்கும் நீ அறிவரியாய் இருந்தாய்! ஆனால், எமக்கெளியாய் இருந்தாய்! இதோ உட்கார்ந்திருக்கிறாரே! நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எத்தனை பெருமைகளைப் பெற்றவராக இருக்கிறார்!

**தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முதலமைச்சர்!**

இப்புவுலகத்தில் இருக்கக்கூடிய ஒப்பற்ற தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தத் தமிழ்களாய் திகழ்கிறார். தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தனிப்பெரும் முதல்வராகத் திகழ்கிறார். குறிப்பிடத்து சொல்லச் செப்பிய எத்தனையோ வெற்றிகளுக்கு அவரே காரணகர்த்தாவாக இருக்கிறார். ஆனால், இவ்வளவு வெற்றிகளையும் தன்னிடத்திலே கொண்டிருப்பதைப்போல.

இராமாயணத்திலே ஓரிடத்தில் வால்மீகி சொல்வார், இராமனுடைய கல்யாண திருக்குணங்களையெல்லாம் சொல்கிற போது. இராமன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்று ஓரிடத்தில் சொல்கிறார். இராமன் சக்கரவர்த்தியின் திருமகன்; அதனால் இராமன் சௌலப்யமாக இருந்தான் என்று சொன்னார். சௌலப்யம் என்கிற வடமொழிச் சொல்லுக்கு எளிவந்த தன்மை என்பதே தமிழில் சரியான பொருளாக இருக்கிறது. அவன் சக்கரவர்த்தித் திருமகனாக இருந்தான்; மாபெரும் அயோத்தியின் அரசனாக இருந்தான். ஆனால், சாதாரண குடிமக்களும் தன்னை வந்துப் பார்க்கக்கூடிய அளவிற்கு எளிமையான ஒருவனாக இருந்தான் என்று வால்மீகி சொன்னார். அதைத்தான், யாவர்க்கும் அறிவரியாய் ஆக இருந்தாலும், எமக்கெளியாய் என்று மணிவாசகப் பெருமான் தெள்ளுதமிழினத் தமிழில் மிக அருமையாக அந்தப் பாடலில் குறிப்பிட்டார். அதுபோல், இன்றைக்கு அவர் முதலமைச்சராக இருந்தாலும், தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருக்கக்கூடிய தமிழ் மகனும் அவரை வந்துப் பார்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய குறையைச் சொல்லக்கூடிய அளவிற்கு, சாதாரண ஏழை, எளிய மக்களுக்கும் எளியவனாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களின் இந்த எளிவந்த தன்மையான் நீங்கள் பெற்றிருக்கக்கூடிய சிறப்புகளெல்லாம் பெருஞ்சிறப்பாக நாங்கள் கருதுவோம் என்பதைச் சொல்லி, 2026 ஆம் ஆண்டில் நீங்கள் தேர்தலில் யாரை வேண்டுமானாலும் கூட்டணியில் சேர்த்துக்கொண்டு, எந்த விதமான permutations and combinations-ஐ வேண்டுமானாலும் போட்டுக்கொண்டு, யாருடன் தேர்தல் களத்திற்கு வந்தாலும்,

எப்படி தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்தில் அவரை எதிர்த்து வந்திருக்கக்கூடிய அவனையும், அவனோடு கூட்டணியில் வந்திருக்கக்கூடிய வேளிரையும் எப்படி அவன் வெற்றி கொண்டு இன்றைக்கும் சரித்திரத்தில் நிலைத்திருக்கிறானோ, வெண்ணிப்பறந்தலையில் வெற்றிகொண்டு, தன்னை எதிர்த்து நிற்கக்கூடிய மன்னர்களையெல்லாம் தோற்கடித்து, அந்தக் கூட்டணிகளையை எப்படியெல்லாம் வெற்றி கண்டு இன்றைக்கும் கரிகால் பெருவளத்தான் புறநானூற்றிலும், தமிழ் இலக்கியங்களிலும் 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!' என்று அவனை இன்றைக்கும் புறநானூறு பாடுகிறது.

அப்படிப்பட்ட கரிகால் பெருவளத்தான் அவன் பெற்றிருக்கக்கூடிய வெண்ணிப்பறந்தலை வெற்றிகளைப் பெற்றிருக்கக்கூடிய கரிகால் பெருவளத்தானைப்போல, இனி எந்தத் தேர்தல் வந்தாலும், அந்தத் தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் தமிழ்நாட்டில் மிகப் பெரிய வரலாற்றைப் படைக்கக்கூடியவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருப்பார்கள் என்று சொல்லி, அவர் வாழ்க, புறநானூற்று வரிகளில், 'நல்நீர் பஃறுளி மணலினும் பலவே' என்று வாழ்த்தியதைப்போல, அவர் கடற்கரையில் வீற்றிருக்கக்கூடிய அந்த மணற்துகள்களிலும், கடல் உள்ள வரையிலும், கார் உள்ளவரையிலும், இந்த பார் உள்ளவரையிலும் உங்கள் புகழ் ஓங்குக! ஓங்குக! என்று சொல்லி, என் உரையை நான் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த உரையை நிறைவு செய்வதோடு, இந்தத் துறைகளுக்கு தொடர்ந்து எங்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கக்கூடிய அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர்கள், நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய துறையினுடைய தலைவர்கள், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, தலைமையிலான துறையினுடைய தலைவர்கள், அத்துறைகளில் பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரண்டு துறைகளில், நிதித் துறை தொடர்பாக 64 வெட்டுத் தீர்மானங்களும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக 46 வெட்டுத் தீர்மானங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நான் படித்திருக்கிறேன். அவற்றிற்கெல்லாம் உரிய விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். எனவே, அவற்றை ஏற்றுக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரையாற்றினார்.

---

## பொருளாதாரம் மேன்மை அடைய, நமது முதல்வர் கண்ட முதன்மையான திட்டம்தான் 'நான் முதல்வன் திட்டம்'!

# கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையின் மேம்பாட்டுக்கு ரூ.150 கோடி ஒதுக்கிய முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் - அ.வெற்றிஅழகன் பேச்சு!

**சென்னை, ஏப். 29- சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய வில்லிவாக்கம் தொகுதி கழக உறுப்பினர் அ.வெற்றி அழகன், "தமிழ்நாட்டின் பொருளாதாரம் மேன்மை அடைய "நான் முதல்வன்" எனும் முதன்மையான திட்டம் கண்டெடுத்த நமது முதல்வருக்கு கோடி நன்றிகள்!" என்றும் - கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையின் மேம்பாட்டுக்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கிய முதல்வருக்கு நன்றி!" என்றும் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

இனமான பேராசிரியர் பேரன் அன்பு வணக்கங்கள் கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன். திராவிட இன எழுச்சிக்கு வித்திட்ட திராவிடத் தலைவர்கள் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பெருந்தகை பேராசிரியர் அவர்களின் வழித்தோன்றல், பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணியதெல்லாம் வென்றுகாட்டி, பாராட்டுப் பெற்ற கலைஞர் அவர்களாலும், இளைஞர் அணிச் செயலாளர் முதல் தலைவர் பதவி வரை அனைத்திற்கும் நீங்களே தகுதியானவர் என பேராசிரியர் அவர்களாலும் பறைசாற்றப்பட்ட எங்கள் முதல்வர் திராவிட நாயகர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கங்கள். அந்த நன்றி உணர்வுகளோடு, தமிழ்நாட்டுக் கல்விபெறும் ஏழை மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்தாலும் சமுதாயத்தில் உயர வேண்டும், உயர்ந்த நிற்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு, என்னை மிகவும் கவர்ந்த திட்டம் இது. 'நான் முதல்வன்' திட்டத்திற்கு வித்திட்ட நம் முதல்வர் ஐயா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நன்றி உணர்வோடு, இந்த அவையில் மிகவும் ஈர்த்த அந்த திட்டத்தைப் பற்றி ஓரிரு வரிகளில் சொல்லிவிட்டு எனது உரைக்குள் செல்ல விரும்புகிறேன்.

ஒரு ஏழை மாணவர் இன்று எளிதாக ஒரு தேர்வில் தேர்ச்சிபெற்று I.A.S. ஆக முடியுமென்ற அந்தக் கனவை நனவாக்கிய அந்த கனவிற்கு உயிர் தந்திருக்கக்கூடிய நம் முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களையும், நன்றிகளையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோடி நன்றிகள் சொன்னாலும் மிகையாகாது. முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி முடித்து, கலைத் துறையில் கால் பதித்து, கால் பதித்த இடங்கள் அனைத்திலும் வெற்றி பெற்று, செல்வம், புகழ் இரண்டும் அடைந்திட்ட பொழுதும், தலைவர் அழைத்தவுடன் அனைத்தையும் மறந்து கழகத்தின் உறுப்பினராக சேர்ந்து, இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்று, தலைவரிட்ட கட்டளையையேற்று, தலைவருக்குத் துணையாக கழகப் பணி, தேர்தல் பணி இரண்டிலும் பணியாற்றி, சென்ற தேர்தல், நின்ற தேர்தல் அனைத்திலும் வெற்றி வாகை சூடி,

**பேரறிஞர் அண்ணாவின் மடல்!**

இளைஞர் அணிச் செயலாளர், நம் மரியாதைக்குரிய அண்ணன் உதயநிதி அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். வெற்றியோடு வலம் வரும் என் பள்ளிகால தோழர், கழகத்தை இன்னும் ஐம்பதாண்டு காலம் வழிநடத்த வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற துணை முதல்வர் அண்ணன் உதயநிதி அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கழகப் பணிகளுக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்து வரும் எனது மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் பி. கே. சேகர்பாபு அவர்களுக்கும் இத்தருணத்தில் எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சி மாநாட்டிற்கு தம்பிகளுக்கு மடல் தீட்டும்பொழுது "அன்பிலார் அழைக்கின்றார் வாரீர்! வாரீர்!" என்று மடல் எழுதும் அளவிற்கு உழைப்பில் உயர்ந்து, ஒன்றிணைந்த திருச்சி மாவட்ட தலைகர்த்தர் அன்பிலார் அவர்களின் பேரன் அண்ணன் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களையும் சமதளத்தில் வழிநடத்திச் செல்லும் சபாநாயகர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர் ஐயா அவர்கள் வந்திருக்கிறபோது இந்த பதிவை நான் மறுபடியும் செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். என்னை மிகவும் ஈர்த்த திட்டம் 'நான் முதல்வன் திட்டம்'. *Economy, One trillion dollar economy* பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று நாம் பேசுகிறபோது, இம்மாதிரியான திட்டங்கள் *skill development* நான் முதல்வன் திட்டத்தைவிட ஒரு சிறந்த திட்டம் இந்தியாவில் இருக்கமுடியாது என்பதை பெருமையோடு இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சபையில், இந்த அவையில் நம் முதல்வர் அவர்களுக்கு இந்த *skill development oriented* ஆக நான் முதல்வன் திட்டத்தை வழங்கியிருப்பதனால் அது எப்படிப்பட்ட பயனை நம் மாணவர்களுக்கு தரும் என்பதை சமீபத்திய *results* அதை உணர்த்தி இருக்கிறது. அதற்கு இத்தருணத்தில் நான் நன்றியை மறுகணம் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்களின் பெயரால் ஈ.வெ.ரா. மாளிகை, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் அண்ணா நூற்றாண்டு நூலகம், முத்தமிழறிஞர் அவர்களின் பெயரால் கலைஞர் நூற்றாண்டு உயர் மருத்துவமனை என அமைத்திட்ட முதலமைச்சர் அவர்கள் எனது தாத்தா பெருந்தகை பேராசிரியர் அவர்களை பெரியப்பா என அன்போடு அழைத்ததோடு நில்லாமல் இனமான பேராசிரியர் அவர்களின் புகழ் நிலைக்கும் வண்ணம், இனமான பேராசிரியர் அவர்களுக்கு DPI வளாகத்தில் முழு உருவச் சிலை. DPI வளாகத்தில் பேராசிரியர் அன்பழகனார் நூற்றாண்டு வளைவு, ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலகத்திற்கு பேராசிரியர் அன்பழகனார் மாளிகை என பெயர் சூட்டி அங்கே மார்பளவு சிலை, பேராசிரியர் புத்தகங்கள் நாட்டுடமை என பெருந்தகை பேராசிரியர் புகழை நிலைநிறுத்திட்ட எங்கள் முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும் என் தந்தை அன்புச்செல்வன் சார்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றிகளையும், வணக்கத்தையும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

புகழுரையை ஏற்க மறுத்து புள்ளிவிவரத்தை அவைக்கு அளித்து ஆட்சி புரிந்திடும் திராவிட நாயகர் அவர்களே உங்களுக்கு மறுபடியும் என் வணக்கங்கள். நான் சட்டமன்ற உரையில் கோரியவண்ணம் *Bangalore, NIMHANS* மனநல மருத்துவமனை போன்று நான் சார்ந்திருக்கக்கூடிய வில்லிவாக்கம் தொகுதி, கீழ்ப்பாக்கத்தில் அமைந்திருக்கக்கூடிய மனநல மருத்துவமனையை *Tamil Nadu Institute of Mental Health and Neurosciences (TNIMHNS)*, *NIMHANS*-ஆக உயர்த்திட வேண்டினேன். அந்த கோரிக்கையை அப்படியே ஏற்று 150 கோடி ரூபாய் அறிவித்து அதில் 40 கோடி ரூபாய்க்கு (மேசையைத் தட்டும் ஒலி) பணிகள் முடியும் நிலையில் உள்ளன. ஒரு புரிதலுக்காக அது என்ன என்பதை இந்தச் சபையில் தெரிவிக்க விரும்புகிறேன்.



*NIMHANS* என்பது தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் மையம். *National Institute of Mental Health and Neurosciences* என்பார்கள். *NIMHANS* நாட்டில் மனநலம் மற்றும் நரம்பியல் கல்விக்கான உச்ச மையம் ஆகும். மருத்துவத் துறையில் இதயம், கண், பல், நரம்பு என்ற பல துறைகள் இருந்தபோதும் எல்லாவற்றிற்கும் முதன்மையானது மனநலம் என்பதை அறிந்து,

*TNIMHNS* அறிவித்ததனால் திராவிட மாடல் நாயகரை *TNIMHNS* நாயகரே என்று அழைத்திட்டாலும் மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த *TNIMHNS* அப்படி என்கிற செய்தி இந்த மருத்துவமனை இந்த *Infrastructure, Asia*ல் பல மனநலம் சார்ந்த *conferences* நடத்துவதற்கு ஒரு பெரிய வழிவகை செய்யும் என்பதை இந்த அவையில் இத்தருணத்தில் பதிவிட விரும்புகிறேன்.

**ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள்**

சமீபத்தில் வெளியான ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்கள். தமிழ்நாடு தொடர்ச்சியாக 8 சதவிகிதம் வளர்ச்சி. 20242025 ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதம் வளர்ச்சி. இதுவே தமிழ்நாட்டை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் தரவுகள். எல்லோருக்கும் எல்லாம் என்ற முதல்வர் அவர்களின் உயரிய தத்துவத்தை அடைந்திட, அழிவற்ற கல்வி செல்வத்துக்கு நமது திராவிட மாடல் அரசு நிதி நிலையில் ஒதுக்கிய தொகை ரூபாய் 46,760 கோடி. ஆனால், ஒன்றிய அரசு நாடு முழுவதும் பள்ளி கல்வித் துறைக்கு ஒதுக்கிய தொகை, ரூபாய் 78,572 கோடிதான். மாநிலத்தின் எதிர்கால மனித வள ஆற்றலை வளர்க்க கல்வித் துறை வளர்ச்சி அதிமுக்கியம் என்பதை உணர்த்தும் தரவு. ஏற்கெனவே நான் வாசிக்கக்கூடிய இந்தத் தரவை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதை மறுபடியும் வாசிக்கிறேன். முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஆரம்ப பள்ளி, 3 கிலோ மீட்டர் தொலைவில் நடுநிலைப் பள்ளி, 5 கிலோமீட்டர் தொலைவில் உயர்நிலைப் பள்ளி, 7 கிலோ மீட்டர் தொலைவில் மேல்நிலை பள்ளி இருக்கவேண்டுமென்ற விதியை உருவாக்கியதால் அவரவர் கிராமத்தின் அருகே அமைந்த பள்ளிகளில் மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது மாநிலம் முழுவதிலுமுள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். மாநிலம் முழுவதிலுமுள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இது நாட்டின் மொத்த சேர்க்கையில் 5.24 சதவிகிதம் ஆகும். தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (*Gross Enrollment Ratio*) 98.4 சதவிகிதம், உயர்நிலைப் பள்ளிகளில் 97.5 சதவிகிதம், மேல்நிலைப் பள்ளிகளில் 82.9 சதவிகிதம் உள்ளது. ஆக, தேசிய அளவில் இந்த விகிதங்கள் முறையே 91.7%, 77.4% மற்றும் 56.2% ஆக உள்ளது. எனவே, தமிழ்நாடு, இந்திய அளவில் கல்வியில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர்மாணவர் விகிதம் தேசிய சராசரியை விட மிகச் சிறப்பாக உள்ளது. ஒன்றிய அரசின் *NITI Aayog* வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, *School Education Quality Index*ன்படி 73.4 சதவிகிதம் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்ட பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 7,800 கோடி ரூபாய் செலவில் 18 ஆயிரம் வகுப்பறைகளைப் புதுப்பித்து மேம்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, கடந்த 20222023 மற்றும் 2023 2024 ஆம் நிதியாண்டுகளில் 2,203.75 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வகுப்பறைகள் புதுப்பொலிவு பெற்று திகழ்கின்றன. இத்திட்டம் பேராசிரியர் அவர்களின் பெயருக்கும், புகழுக்கும் புகழ் சேர்க்கக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம். (மணியடிக்கப்பெற்றது) மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நிறைவு செய்துவிடுகிறேன்.

**வடக்கின் ஆதிக்கத்துக்கு அடிபணியாத தமிழ்நாடு!**

வடக்கின் ஆதிக்கத்திற்கு கழகமும், தமிழகமும் அடிபணியாது என சட்டசபையில் கம்பீரமாக ஓங்கி ஒலித்த நமது நிதியமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களின் கம்பீரக் குரல் கேட்டு மெய் சிலிர்த்தேன். அதுதான் நம் முதல்வரின் குரல். அத்துணிச்சல் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் போன்ற தலைவர்கள் தந்தது. அறிவைப் பரவலாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த 3 ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி மற்றும் புத்தகத் திருவிழாக்கள், மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படுவதுடன், உலகெங்கும் தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்திட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது திராவிட மாடல் அரசு.

மானியக் கோரிக்கைகள் மீதான எனது உரையை நிறைவு செய்யும் முன்னர், என்னைத் தேர்ந்தெடுத்த வில்லிவாக்கம் தொகுதி மக்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொகுதியில் நடைபெற்ற பணிகள் மற்றும் நடைபெற வேண்டிய பணிகள் குறித்த விவரங்களைத் தருகிறேன். அவற்றைப் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிட வேண்டுகிறேன்.

நிறைவாக ஒரே ஒரு செய்தி. ஒரு *flashback*. இது 2021 ஆம் ஆண்டில், என்னுடைய சட்டமன்ற உரையில் இந்தச் செய்தியை ஏற்கெனவே நான் பதிவிட்டேன். மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு குறித்த நிகழ்வுகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இந்தச் செய்தியை பதிவிடுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

1958 ஆம் ஆண்டு, ஜனவரி 6 ஆம் தேதி, அப்போதைய பிரதமர் நேரு அவர்கள் விமான நிலையத்திற்கு வரும்போது, அவருக்கு கருப்புக் கொடி காட்ட வேண்டுமென்று கழகத்தால் முடிவெடுக்கப்பட்டது. அதற்கு முன்னரே பல தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். முன்னணி தலைவர்களான அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறேன், பேராசிரியர் அன்பழகன், மதியழகன், ஆசைத்தம்பி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ். ஆர். கே. ஆர். இராமசாமி, டி.வி. நாராயணசாமி ஆகிய அனைவரும் நேரு அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டிவிடக் கூடாது என்பதற்காக கைது செய்யப்பட்டனர். அதை உணர்ந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி, அதில் எங்கள் பாட்டியும் இருந்தார். விமான நிலையத்தில் வந்திறங்கிய திரு. நேரு அவர்களை வரவேற்க காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த 50 பேர் சென்றிருந்தனர். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், எனது பாட்டி திருமதி வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்களும், திருமதி அலமேலு அப்பாதுரையார் அவர்களோடு சேர்ந்து, சுமார் ஆயிரம் நபர்களை அழைத்துச் சென்று, பிரதமர் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டினார்கள். இந்த உணர்வை, அதாவது, 1958, ஜனவரி 6 ஆம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்வை தற்போது இந்த அவையில் பதிவிட முக்கியக் காரணம், கழகம் தோன்றிய அன்று முதல் இன்று வரை எதிர்ப்பதோ, ஆதரிப்பதோ எந்த முடிவெடுத்தாலும், அதனை நின்று வென்றுகாட்டும் திறன் படைத்தவர்கள் நாம் என்பதைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதிவோடு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.வெற்றி அழகன் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் த. ஆறுமுகம்
### ஏப்ரல் 29 (2017)



கழகம் துவங்கிய நாள் இரவே தனது கிராமத்தில் கழகக் கொடியேற்றிய இவர், வெங்கடரமணபுரம் கிளைக் கழகப் பொருளாளராக தனது கழகப் பணியை துவங்கி, கிளைக் கழகச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, கழக முதல் மாநில மாநாடு முதல் விருகம்பாக்கம் மாநாடு வரை தொண்டர் அணியில் சேர்ந்து பணியாற்றியவர்.

தாமரைக்குளம் ஊராட்சி மன்ற தலைவராகவும் – அரியலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் – அரியலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக 1977, 1980, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மிசா நெருக்கடி காலத்தில் தலைவர் அவர்களை அரியலூருக்கு அழைத்து வந்து அம்பாள் திரையரங்கில் சிறப்புக் கூட்டம் நடத்தி தலைவரின் நன்மதிப்பை பெற்றவர். கழகத்திற்கு சோதனை ஏற்பட்ட காலங்களில் எல்லாம் தலைவர் "கலைஞர்" ஒருவரையே தலைவராக ஏற்றுக் கொண்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**